# பத்துப்பாட்டில் யாழ் இசைக்கருவி

**இ சுகிர்தா.**

**முனைவர்ப்பட்ட ஆய்வாளர்,**

**அறிவியல் தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை,**

**தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் – 10.**

suhisuhirdha324@gmail.com

**78**

**ஆய்வுச் சுருக்கம்**

வேட்டுவர் இறுகக்கட்டிய தங்கள் வில்நாணில் இருந்து எழும் ஓசையை உணர்ந்தனர் . வில்லைப் போன்ற வளைவு உடையதும், நரம்பினால் ஆனதும், விரலால் வருடக் கூடியதுமான கருவி ஒன்றை உருவாக்கினர்இதன் அடிப்படையில் உருவான கருவி . **யாழ்** ஆகும்சங்க . இலக்கியமான பத்துப்பாட்டில்காணப்படும் யாழ் பற்றியச் செய்திகளையும், யாழின் அமைப்பினையும், யாழின் வகைகளையும், யாழினை மீட்டும் தன்மையினையும் இக்கட்டுரை இயம்புகிறது.

**திறவுச் சொற்கள்**

யாழ், யாழின் வகைகள், கருப்பொருளும் யாழும், பாலையாழ், பேரியாழ், சீறியாழ், யாழ் இசைப்போர்.

**முன்னுரை**

மக்களின் உள்ளத்தில் எழுந்த உணர்ச்சி, குரல் வழியாக அல்லது செயற்கைக் கருவி ஒன்றின் வழியாக வெளிப்பட்டதுஇது நகை ., அழுகை, வீரம் உள்ளிட்ட ஒன்பது சுவைகளை வெளிப்படுத்தக்கூடிய கலையாகப் பிறந்ததுகுரல்வழி இசை .இக்கலையே இசை எனப்பட்டது ., கருவிவழி இசை என இசையை இரண்டாகப் பிரிப்பர்இசையின் இனிமைக்குத் துணை செய்பவை . காலத் தேவைகள் சமயச்சடங்குகள் .இசைக் கருவிகள் ஆகும், திருவிழாக்கள் போன்ற பல நிகழ்வுகளின் பொருட்டு பலவிதமான இசைக்கருவிகள் தோன்றி வளர்ச்சிபெற்றன . பயன நாடகத்திற்கு மட்டும் .இசைக்கருவிகள் குரல்இசைக்கு மட்டும் பயன்படுபவைபடுபவை இரண்டிற்கும் பயன்படுபவை எனப் பலவாகத் தோன்றிக் கிளைத்தன இசைக்கருவிகளை இசைத்துப் பாடல் பாடுவோர் பாணர் எனப்பட்டனர்சங்ககாலத்தில் சிறப்புப் பெற்று விளங்கிய . யாழ் இசைக் கருவி பற்றிய செய்திகளைச் சங்க இலக்கியமாகிய பத்துப்பாட்டின் வழியாக காண இக்கட்டுரையில்போம்.

**யாழின் வகைகள்**

இசைக் கருவிகளில் சிறப்பிடம் வகிக்கும் யாழினை நான்கு வகைப்படுத்துகின்றனர்அவை . பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங் கோட்டியாழ் என்பன யாழின் வடிவம் அவற்றில் பயன்படுத்தப்பட்டுள்ள நரம்புகளின் எண்ணிக்கை அடிப்படையில் ஒவ்வொரு வகை யாழுக்கும் பெயர் சூட்டப் பெற்றுள்ளது. **“இந்நால் வகை யாழிற்கும் நரம்பு கொள்ளுமிடத்துப் பேரியாழிற்கு இருபத் தொன்றும், மகர யாழிற்குப் பத்தொன்பதும், சகோட யாழிற்குப் பதினாலும், செங்கோட்டியாழிற்கு ஏழும் கொள்ளப்படும்”. ( உ சாமிநாதையர்.வே.– சிலப்பதிகார மூலமும்**

**அடியார்க்கு நல்லார் உரையும்.ப .100).**

அதிகமாக 21 நரம்புகளைக் கொண்ட பேரியாழும், 7 நரம்புகளைக் கொண்ட செங்கோட்டி யாழும் மிகவும் பழமையானவை மீன்வடிவில் .19 நரம்புகளைக் கொண்டவை மகரயாழ் எனப்படும் . 14 நரம்புகளைக் கொண்டது சகோட யாழ் ஆகும் யாழின் வடிவமே மெல்ல மெல்ல . மாற்றமடைந்த பிற்காலத்தில் வீணையாக உருமாறியது என்பர்.

**கருப்பொருளும் யாழும்**

முதற்பொருளாகிய நிலத்தையும், காலத்தையும் அடிப்படையாகக் கொண்டு பிறக்கும் பொருள்களே கருப்பொருள்கள் .இவை ஐவகை நிலத்திற்கும் இயற்கையாய் அமைந்தவையாகும் . தெய்வம் தொல்காப்பியத்தில் கருப்பொருள் எனத், உணவு, விலங்கு, மரம், பறவை, பறை, தொழில், யாழ் முதலியவற்றோடு இயற்கையும் செயற்கையுமான வேறு பொருள்களும் கூறப் பட்டுள்ளன . இவற்றை,

**"தெய்வம் உணாவே மாமரம் புட்பறை**

**செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ**

**அவ்வகைப் பிறவும் கருவென மொழிப"           - (தொல்.நூ.அகத்.20)**

என்று தொல்காப்பியர் கூறிய ஏழு கருப்பொருளைக் கொண்டு நாற்கவிராசர் பதினான்கு கருப்பொருளாகப் படைத்துள்ளார்.

**"ஆரணங்கு உயர்ந்தோர் அல்லோர் புள் விலங்கு**

**ஊர் நீர் பூமரம் உணா பறை யாழ் பண்**

**தொழில் எனக் கருஈர் எழுவகைத்து ஆகும்"     - (நம்பி .நூ.அகத் .19)**

ஐந்ததிணையிலும் எவ்வகையான யாழ் பயன் படுத்தப்பட்டது என்பதை கருப்பொருள் உணர்த்துகிறதுகுறிஞ்சியாழ் ., முல்லையாழ், மருதயாழ், விளரியாழ் (நெய்தல்யாழ்), பாலையாழ் என ஐவகை நிலத்திற்கும் உரிய யாழ் கூறப்பட்டுள்ளது.

**பாலையாழ்**

பாலையாழ் பற்றி விளக்கவந்த புலவர் யாழின் ஒவ்வொரு உறுப்பையும் ஒவ்வொரு உவமையின் வாயிலாக விளக்கியுள்ளார்யாழின் உறுப்பாயகிய . ‘பத்தர்’ மானின் குளம்பு போன்றதாகவும், இப்பத்தர் மேல் போர்த்தப்பட்ட தோல் விளக்கின் சுடருக்கு உவமையாகவும், பத்தர் பகுதிகள் இணைக்கப்பட்டமை பெண்ணின் வயிற்றில் உள்ள மயிரொழுங்குக்கு உவமையாகவும், நண்டின் கண் பத்தரின் மேலுள்ள ஆணிகளுக்கு உவமையாகவும், பத்தரின் வாய்பகுதி எட்டாம்நாள் தோன்றும் திங்களுக்கு உவமையாகவும், கருமை நிறம் கொண்ட தண்டானது பாம்பிற்கு உவமையாகவும், தண்டின் மீது கட்டப்பட்ட வார்க்கடானது கையில் அணிந்த வளையலுக்கு உவமையாகவும் கூறப்பட்டுள்ளதுஇ .வ்வாறு யாழின் வடிவ நுட்பத்தைக் கீழ் காணும் பாடலின் வாயிலாக அறிய முடிகிறது.

**குளப்புவழி யன்ன கவடுபடு பத்தல்**

**விளக்கு அழல் உருவின் விசிஉறு பச்சை,**

**எய்யா விளஞ்சூற் செய்யோ ளவ்வயிற்**

**றைதுமயி ரொழுகிய தோற்றம்போலப்**

**பொல்லம் பொத்திய பொதியுறு போர்வை**

**அளைவா ழலவன் கண்கண் டன்ன,**

**துளைவாய் தூர்ந்த துரப்பமை யாணி,**

**எண்ணாட் டிங்கள் வடிவிற் றாகி**

**அண்ணா வில்லா அமைவரு வறுவாய்ப்**

**பாம்பணந் தன்ன வோங்கிரு மருப்பின்**

**மாயோள் முன்கை ஆய்தொடி கடுக்கும்**

**கண்கூ டிருக்கைத் திண்பிணித் திவலின்" - (பொருந .4-15)**

என வரும் பாடல் அடிகளில் பாலையாழ் பற்றியும் அதன் வடிவமைப்பு நுட்பம் பற்றியும் அறியமுடிகிறது.

**பேரியாழ்**

ஒன்பது எண் வடிவிலான வார்க்கட்டையும், வரகு கதிர்கள் போன்ற துளைகளையும், இத்துளைகள் நிரம்பும்படியான ஆணிகள் பொருத்தப்பட்டு தொலானது பொன்னிறம் பொன்று காணப்பட்டன என்பதனைக் கீழ் காணும் பாடலடியால் அறியலாம்.

**"தொடித் திரிவு அன்ன தொண்டு படு திவவின்**

**கடிப்பகை அனைத்தும், கேள்வி போகாக்**

**குரல் லோர்த்துத் தொடுத்த சுகிர்புரி நரம்பின்**

**அரலை தீர உரீஇவரகின் :**

**குரல்வார்ந் தன்ன நுண்டு களை இரீஇச்**

**சிலம்ப அமை பத்தல் பசையொடு சேர்த்தி**

**இலங்குதுளை செறிய ஆணி முடுக்கிப்**

**புதுவது புனைந்த வெண்கை யாப்ப மைத்து**

**புதுவது போர்த்த பொன்போற் பச்சை**

**வதுவை நாறும் வண்டுகமழ் ஐம்பால்**

**மடந்தை மாண்ட நுடங்கு எழில்ஆகத்து**

**அடங்குமயிர் ஒழுகிய அவ்வாய் கடுப்ப,**

**அகடுசேர்பு பொருந்தி, அளவினில் திரியாது**

**கவடுபடக் கவைஇய சென்றுவாங் குந்தி**

**நுணங்கர நுவறிய நுண்ணீர் மாமைக்**

**களங்கனி யன்ன கதழ்ந்துகிளர் உருவின்" - (மலைபடு .21-36).**

என்றவரிகள் பேரியாழின் அமைப்பை விளக்குவதுடன் சங்க கால மக்களின் இசை மற்றும் இசைக் கருவிகள் அமைத்த நுட்பத்தினையும் விளக்குகின்றது.

**“இடனுடைப் பேரியாழ் முறையுளிக் கழிப்ப”** - (பெரும்பா - 462)

பேரியாழை இசைப்போர் பெரும்பாணர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

**"பாசிலை ஒழித்த யரா அரைப் பாதிரி**
**வள் இதழ் மாமலர் வயிற்றிடை வகுத்தனன்**
**உள்ளகம் புரையும் ஊட்டுறு பச்சைப்**
**பரியரைக் கமுகின் பாளையம் பசும்பூக்**
**கருவிருந் தன்ன கண்கூடு செறிதுளை**
**உருக்கி யன்ன பொருத்துறு போர்வைச்**
**சுனை வறந் தன்ன, இருள் தூங்கு வறுவாய்ப்**
**பிறை பிறந் தன்ன பின்னேந்து கவைக்கடை**
**நெடும்பணைத் திரடோள் மடந்தை முன்கைக்**
**குறுந்தொடி பேய்க்கு மெலிந்து வீங்கு திவவின்**
**மணிவார்ந் தன்ன, மாயிரு மருப்பின்**
**பொன்வார்ந் தன்ன புரியுடங்கு நரம்பின்**
**தொடையமை கேள்வி இடவயிற் தமீக"- (பெரும்பாணா .4-16)**

பாதிரிப் பூ போன்ற நிறமுடைய அவ்யாழ் உள்நாக்கில்லாத வாய் போன்றதுயாழின் . கவைக் கடை பிறைபோலும், வார்க்கட்டு பெண்கள் அணியும் வளையல் போன்று நெகிழ்ந்தும், இறுகியும், நீலமணி போன்ற தண்டும், நரம்புகள் பொன்னை உருக்கி செய்தமை போன்று காணப்பட்டன என்பதனை மேல்க் கானும் பாடலின் மூலம் அறிய முடிகிறது.

**சீறியாழ்**

**"இன்குரற் சீறியாழ் இடவயிற் தழீஇ" - ( சிறுபாணா -35)**

சிறுயாழினை இசைப்பவர் சிறுபாணர் என்றழைக்கப்பட்டனர்.

**“ஏழ் புணர் சிறப்பின் இன்றொடைச் சீறியாழ்” - (மதுரைக் காஞ்சி – 559)**

பெண்கள் இயக்கிய சீறியாழ் பற்றிய குறிப்பினையும், சீறியாழ் ஏழு நரம்புகளால் ஆக்கப்பட்டிருந்த செய்தியினையும் இப்பாடல் மூலம் அறியமுடிகிறதுமேலும் .,

**"பைங்கண் ஊகம் பாம்புபிடித்தன்ன**
**அங்கோட்டுச் செறிந்த அவிழ்ந்து வீங்கு திவவின்**
**மணி நிரைத் தன்ன வனப்பின் வாயமைத்து**
**வயிறுசேர் பொழுகிய வகையமை அகளத்துக்**
**கானக் குமிழின் கனிநிறங் கடுப்பப்**
**புகழ் வினைப் பொலிந்த பச்சையொடு தேம்பெய்து**
**அமிழ்து பொதிந் திலிற்றும் அடங்குபுரி நரம்பிற்**
**பாடுதுறை முற்றிய பயன் தெரி கேள்விக்**

**கூடு கொள் இன்னியங் குரல்குரல் ஆக" (சிறுபாணா. 221-229)**

குரங்கு பாம்பின் தலையைப் பிடித்தால் அது எவ்வாறு கையை நெகிழ்ந்தும், இறுகியும், சுற்றுமோ அவ்வாறு அமைந்த வார்க்கட்டும் மணிகளை வரிசையாக வைத்தது போன்று விளிம்புகளை இணைக்கும் ஆணிகள் காணப்பட்டமையும், குமிழம்பழம் நிறத்தில் அமைந்த போர்வை, முறுக்கடங்கிய நரம்புகள் பெற்று சீறியாழ் காணப்பட்டதை மேற்கூறிய பாடல் வாயிலாக அறியமுடிகிறது.

**யாழ் இசைப்போர்**

பேரியாழை இசைப்போர் பெரும்பாணர் எனவும், சீரியாழை இசைப்போர் சிறுபாணர் எனவும் அழைக்கப் பெற்றனர்யாழினை இசைக்கும் பாணர்களைச் . **"சென்னியர்"** என்று நற்றிணை )189/2) குறிப்பிடுகிறது .'சென்னி' என்பது பிச்சை எடுக்கும் மண்டை போன்றதொரு கலம் . யாழ் மீட்டுகின்ற கலையறிவு .அக்கலத்தை யாழின் குடத்திற்கு உவமையாக கூறுயுள்ளனர் மட்டுமன்றி உறுப்புக்களைத் தனித்தனியே வருணித்திருப்பதால் யாழ் செய்யும் செய்தொழில் ம் பண்டைத் தமிஅறிவுழர் பெற்றிருந்தனர்.

**முடிவுரை**

சங்க காலத்தில் பல்வேறு வகையான யாழ் கருவிகள் பயன்படுத்தப் பட்டமையும் அவைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான நுட்பங்களைக் கொண்டமையும், பண்டைத் தமிழரின் இசை நுட்பத்தைப் பறைசாற்றுவதாக அமைகிறது மேலும் ஆண் பெண் என இரு பாலரும் இசைக்கும் . இசைக் கருவியாக யாழ் திகழ்ந்ததுயாழின் பல்வேறு கால பரிணாம வளர்ச்சியே இன்றைய . .நரம்புக்கருவியான வீணையாகும்

**துணை நூற் பட்டியல்**

1. இளம்பூரணர் (ஆ.உ) - தொல்காப்பியம், சைவசித்தாந்த நூற் பதிப்புக்கழகம், சென்னை – 18. 1986.
2. சாமிநாதையர் உ(ஆ.ப) வே. - சிலப்பதிகாரமூலமும் அடியார்க்குநல்லார் உரையும், உநூல்நிலையம் .சா.வே., சென்னை – 2000.
3. சோம சுந்தரனார் பொ- (ஆ.உ) வே. பத்துப்பாட்டு தொகுதி I,II சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை -18. 2007.
4. நாராயணசாமி (ஆ.உ) - நற்றிணை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை -18. 1952.